# காரைநகரில் நேற்றிரவு முதல் பயங்கர மோதல்


விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 19 றமழான் 16 இதழ்: 51
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 02-04-1991


(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமில் நேற்றிரவு சுமார் 9-15 மணியளவில் பயங்கர மோதல் வெடித்தது.

பீரங்கிகள், ஷெல் மோட்டார் குண்டுகள், தன்னியக்க துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க இந்த மோதல் தொடர்ந்த வண்ணமிருந்தது.

கடற்படையினர் தொடர்ச்சியாக 'பரா' வெளிச்சங்களை ஏவி அகோரஷெல் தாக்குதலை மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

கடற்படை முகாமைச் சுற்றிப் புகைமண்டலம் எழுந்த வண்ணம் உள்ளது.

பொதுமக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்

[4-ம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் 12 தமிழர் வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஸ்ரீ லங்கா பொலிசாரால் 12 தமிழ் மக்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர்.

சைக்கிளில் ரோந்து சென்ற பொலிஸ்காரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் அங்குள்ள தமிழ் மக்களைக் கைதுசெய்து கடுமையாகத் தாக்கினார்கள்.

பொதுமக்களுக்குச் சொந்தமான பல கடைகள் பொலி

[4-ம் பக்கம் பார்க்க]

★ மனிதாபிமான அடிப்படையில்

# செஞ்சிலுவை சங்கத்திடம் ராணுவ சடலங்கள் கையளிப்பு

(நமது நிருபர் தேவா)

**விடுதலைப் புலிகளால் மன்னாரில் மீட்கப்பட்ட 23 இராணுவத்தினரின் சடலங்கள், இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இராணுவத்தினரின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இன்று காலை 8-00 மணிக்குப் பொறுப்பேற்கலாம் எனத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் கொல்லப்பட்டு, பின்பு புலிகளால் கைப்பற்றப்பட்ட 23 இராணுவத்தினரின் சடலங்களையும், விடுதலைப் புலிகள் மனிதாபிமான முறையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்

(4-ம் பக்கம் பார்க்க)

இளவாலை, காரைநகர்

## அகதிகளுக்கு இலவச உலர் உணவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது இடம்பெயர்ந்துள்ள இளவாலை, காரைநகர் பகுதிகளைச்சேர்ந்த குடும்பங்களுக்கு உடனடியாக ஒரு கிழமைக்கான இலவச உலர் உணவை வழங்குமாறு பிரிவு உதவி அரசாங்க அதிபர்களை யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பணித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் ஜனவரி வவுச்சர்களில் மேலதிகக் கொடுப்பனவு வழங்கலில் ஏதாவது தவறுதலாக விடு

(4-ம் பக்கம் பார்க்க)

வவுனியா, மன்னார் பகுதிகளில்

## புலிகளின் தாக்குதல் உக்கிரம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அண்மைக் காலமாக உக்கிரமடைந்து வருகிறது. இத்தாக்குதலினால் அரசபடையினருக்கு பெரும் சேதமேற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத அரசபடைகளுக்கு உதவியாக நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சண்டை நேற்று அதிகாலையி

[4-ம் பக்கம் பார்க்க]

## டிரக்வண்டிமோதி நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை-கொக்குவில் வீதியில் நேற்று டிரக் வண்டி மோதி நால்வர் காயமடைந்தனர்.

மூன்று வயோதிபர் உட்

[4-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை இராணுவத்திடம் அமெரிக்க ஆயுதங்கள்

(கொழும்பு)

அமெரிக்க தயாரிப்பு நவீன ரக ஆயுதங்களை தற்போது இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்தி வருகிறார்கள்.

மன்னார் வேப்பங்குளமோதலில் கொல்லப்பட்டபடையினரிடமிருந்து அமெரிக்க தயாரிப்பான நவீனரக 'மினிமினி எல். எம். ஜி.' புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்கா, பிரிட்டனின் இராணுவ தளபாடங்கள், ஆயுதங்கள் பலவும் அண்மைக் காலமாக இராணுவத்தினர் பயன்படுத்தி வருவதும் தெரிந்ததே. (வி)

# யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்து பாதிப்பு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதல்களினால் யாழ். கொழும்பு போக்கு வரத்து பாதிப்படைந்துள்ளது.

தாண்டிக்குளம் பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் பலத்த விமானத்தாக்குதல்களும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி வந்த பயணி

(4-ம் பக்கம் பார்க்க)

சடலங்களையும், ஆயுதங்களையும்

## ஆயிரக்கணக்கானோர் நேற்று பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

மன்னார் வேப்பங்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 23 இராணுவத்தினரின் சடலங்களை நேற்றுக் காலை 8-45 மணியிலிருந்து ஆயிரத்துக்குமதிகமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

முத்திரைச் சந்தியில் மினிபஸ்கள் தரித்துநிற்கும் பகுதியில் ஆயுதங்களைப் பார்வையிடும் கொட்டகையும், அதற்குப் பின்புறமாக மெதடிஸ்த தேவாலயத்துக்கு சற்று முன்பாக அமைக்கப்பட்ட கொட்டகையில், இராணுவத்தினரின் சடலங்களும்

(4-ம் பக்கம் பார்க்க]

## இராணுவ இழப்பு பற்றி அதிகாரிகள் தகவல்

(கொழும்பு)

கடந்தசனிக்கிழமை மன்னார் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் படையினர் தரப்பில் இரண்டு அதிகாரிகள் உட்பட 25 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## 500 பேர் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஐந்நூற்றுக்குமதிகமான பிரயாணிகள் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேஇடம்பெற்ற மோதலையடுத்தே இவர்கள் தடுத்துவைக்கப்பட்

(4ம் பக்கம் பார்க்க)

வடக்கிலும் கிழக்கிலும்

## அமைதி ஏற்படவேண்டும்

(குருநாகல்)

''நாட்டின் அபிவிருத்தி வளர்ச்சியடைய வடக்கிலும், கிழக்கிலும் அமைதி ஏற்படவேண்டும் என்று வர்த்தக துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய சன்யோ காஸ் குக்கர் சிலிண்டருடன், Sumeet Kitchen Machine, 21'' National கலர் T. V., Akai வீடியோ டெக் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு; ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் ரோட். யாழ்ப்பாணம். (சி-4530)

புத்தம் புதிய 5 அந்தர் 250 கிலோ அவரி தராசு தரமானது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: நிரஞ்சனுஸ், சித்தன்கேணி சந்தி, சித்தன்கேணி, (சி-4512)

### பாலாஜி புத்தகசாலை

ஸ்ரீ சத்திய சாயிபாபா படம் (லெமனர் $3\frac{1}{2}$ X $2\frac{1}{2}$ சைஸ்) விலை ரூபா 2 50. பாடசாலை புத்தக உபகரணங்கள், ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம், 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4519)

### நாவல்கள் (இலவசம்)

வித்தியாசமான கதைகளில் கருத்தில் சிறந்த நாவல்கள் – மீரா வெளியீடுகள். 140/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம். திருக்கணிதம், சாவகச்சேரி. யாழ்ப்பாணத்தில் மீரா வெளியீடுகளை விற்பனை செய்யும் புத்தகசாலைகளில் பெறலாம். (சி-4521)

### ஸ்வீட் மேக்கர்

யாழ்ப்பாணத்திலுள்ள ரவர் கோப்பி பார் நிறுவனத்திற்கு மட்டன் ரோல், கட்லட், போண்டா உட்பட ஸ்வீட் தயாரிப்பதற்கு ''கோக்கி'' ஒருவர் தேவை. நேரில் வரவும். ரவர் கோப்பி பார் மணிக்கூட்டு கோபுர வீதி. யாழ்ப்பாணம்- (சி-4526)

## கிராம சேவையாளர்களின் அலுவலகவாடகை நிறுத்தப்பட்டது

[சித்தன்கேணி]

கிராம சேவை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுவந்த அலுவலகவாடகைப்படி நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சகல கிராம சேவை அலுவலர்களுக்கும் பல வருடங்களாக வழங்கப்பட்டுவந்த இந்தமிகக்குறைந்த கட்டணமான அலுவலக வாடகை திடீரென தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

பெரும் சிரமத்தின் மத்தியில் குறைந்தகட்டணத்துடன் கிடைத்த கிராமசேவை அலுவலகங்களில் கடமையாற்ற வேண்டியிருக்கின்றதாம்(137)

## வீட்டுத்தோட்டம்
### ஊக்குவிப்புப் பிரசாரம்

[கொழும்புத்துறை]

சுதுமலை தெற்கு காந்திவீதி அம்பாள் சனசமூக நிலையத்தினர் தமதுபகுதியில்வீடுவீடாக சென்று வீட்டுத் தோட்டம், உணவு உற்பத்தி, விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் நன்நோக்குடன் கருத்துக்களை பரிமாறி இலவசமாக விதைகளையும் வழங்கி ஊக்குவித்து வருகின்றனர்.

நிலையத்தினர்வீட்டுத்தோட்டப் போட்டிகளைவிஸ்தரிக்கும் நன்நோக்குடன் கருத்தரங்குகளையும் நடாத்தி மக்களுக்கு அறிவுரைகளையும் வழங்கிவருகின்றனர்.

விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டுத் தேடுவாரற்று பற்றையாகக் கிடந்த 5 பரப்புக் காணியைச் சிரமதானப்பணி மூலம் திருத்தியமைத்து 500க்கும் மேற்பட்ட மரவள்ளிக் கட்டைகளை நாட்டி நிலைய அங்கத்தவர்கள் கூட்டாகச் சேர்ந்து சிரமதானப்பணி மூலம் சிறப்பாகச்செய்து வருகின்றனர். (154)

### வகுப்பு

கொம்பியூட்டர் Basic, S.L.E.A.S., தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும், I. A. B, வகுப்புகள் 6-4-91ல் ஆரம்பமாகின்றன. School of Business Administration; 16, 3வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4605)

### புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தூர இடமாணவர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 30-03-91ல் ஆரம்பமாகியுள்ளன. 30ம் திகதி நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் விற்பனைக்குண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி–4604)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள்

### கலைநிகழ்ச்சிகள்

முத்தமிழ் விழாவை வரவேற்கும் விதத்தில் ஏப்ரல் 5ம் தேதிவரை கிராமங்களில் மக்கள் கலை, கலாச்சார பிரிவினரால் அங்கீகரிக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரசார பிரிவு கோரியுள்ளது.

6ம் திகதி ஆரம்பமாகும் விடுதலை புலிகளின் முத்தமிழ் விழாவை வரவேற்கும் வகையிலும் சிறப்பாக அமையும் வகையிலும், அன்பான மக்கள், பொது அமைப்புகள், நிறுவனங்களுடைய பங்களிப்பை தாங்கள் வேண்டி நிற்பதாக தெரிவித்துள்ளனர்.

### அலங்கார வளைவுகள்

வீதிகள் தோறும், கலை, கலாச்சாரத்தை சித்தரிக்கும் அலங்காரபந்தல்கள் ஓவியங்கள் பந்தந்தகள்நிறுவுதல் வீதிகள் தோறும் பாதகைகளை தொங்க விடுதல் போன்ற அலங்கரிப்புகளை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியில் சிறந்த அலங்கரிப்புகள் முதல் மூன்றுக்கும் யாழ். மாவட்ட பிரசாரப் பிரிவினர் பரிசில்களை வழங்கவுள்ளனர்.

### பெயர்ப் பலகைகள்

யாழ். நகரிலுள்ள வர்த்தகநிலையங்களால்பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுவருகிறது. புதிதாக திறக்கப்படும் கடைகளில் தனித் தமிழ்ப் பெயர்கள் எழுதப்பட்டுவருகின்றன; மற்றும்பகுதிகளிலும் பெயர்ப் தமிழுக்கு முன்னுரிமையளிக் பலகைளில்கப்பட்டுவருகிறது.

### சந்திப்பு

இன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த சிற்றூரவைகள், ச. ச. நிலையங்கள். கடற்றொழிலாளர் சங்கங்கள், விவசாய சங்கங்மள், மாதர் சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களை முத்தமிழ் விழா தொடர்பான இச்சந்தில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் பிரசாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னையா மார்க்கண்டு

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 17-04-1926 | 08-04-1985 | 02-04-1991 |

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, சகோதரன், சகோதரிகள்,
மைத்துனன்மார், மைத்துனிமார், மருமக்கள்.

பிரதான வீதி,
சங்கானை. (சி–4525)

## ஓர் ஆண்டுத் திதி நினைவஞ்சலி



### அமரர் சீனிவாசகம் குணபாலசிங்கம்
(ஆசிரியர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16-09-1933 | 13-04-1990 |

எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: தனபாக்கியவதி,
மக்கள்: மனோகரன், கிரிதரன்,
தவப்பிரியா.

''பரமேஸ்வரி பவனம்'',
சங்கானை கிழக்கு,
சங்கானை; (சி-4601)

## வெ/செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம்
## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க்காணப்படும் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடம் இருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள், தலைவர் வெ/செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம் குருக்கள் புதுக்குளம் என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ, அனுப்பப்படல் வேண்டும்.

(1) விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர் ;
(2) பிறந்த திகதி;
(3) நிரந்தர விலாசம்:
(4) கல்வித்தகைமைகள் ;
(5) தற்போது வதியும் மாவட்டம்:
(6) மாவட்டத்தில் வசித்த காலம் ;
(7) அண்மையில் பெறப்பட்ட இரண்டு சான்றிதழ்கள்
(அவ்வப்பகுதி கி. சே. அலுவலரின் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.)

**கல்வித்தகைமைகள் :**

கூட்டுறவுப்பணியாளர் 7வது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வைத்தரத்தில் மூன்று வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் எட்டாவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பர்வைத்தரத்தில் ஆறு வருடங்கள் கடமையாற்றய அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பட்டம் அல்லது சமமான தகுதிகளுடன் நான்கு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் (அங்கீகரிரகப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் / கைத்தொழில் நிறுவனத்தில்) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் (உ/தரம்) தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. (உ/தரம்) உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்திருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:-**

$$\frac{1305 — 2370}{60x4 — 75x11}$$ மற்றும் படிகளும்

1991 ஏப்பிரல் 21-ம் திகதி 40 வயதுக்கு மேற்படாத விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

வவுனியா மாவட்டத்தில் வதிபவர்களுக்கும் தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

எல் சி. லெம்பேட்,
தலைவர்,
பல நோ. கூ. சங்கம்,
செட்டிகுளம் குருக்கள் புதுக்குளம்.

(ஏ–1201)

# ★ இலங்கை வங்கிகளில் தடுத்து வைக்கப்பட்ட சொத்துக்களை

# மீள ஒப்படைக்க நடவடிக்கை

## பல பேர் பயனடைவர்

(கொழும்பு)

இலங்கை வங்கிகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொது மக்களின் கோடிக்கணக்கான பணங்களை மீண்டும் உரியவர்களிடமே ஒப்படைக்கப்போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

சரியான கணக்குகளின்றி வங்கிகளில் கணக்கில் இடப்பட்ட பொதுமக்களின் கோடிக்கணக்கான ரூபா பணங்களையும், சொத்துக்களையும் அரசு பல வருடங்களாகத் தடுத்து வைத்திருந்தது.

தற்போது இச்சொத்துக்களை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கும்படி அரசு கூறியுள்ளதாக இலங்கைவங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் வெளிநாடுகள் சென்றவர்களுக்கோ அல்லது வெளிநாடுகளில் தமது பிரஜா உரிமைகளை மாற்றிக்கொண்டவர்களுக்கோ இச்சலுகைகள் காட்டப்படமாட்டாது என்றும், அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையால் நாட்டில் பலர் நன்மையடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## மேற்கு வங்க சட்டப்பேரவை கலைக்கப்பட்டது

(புதுடில்லி)

மேற்கு வங்காள சட்டப்பேரவை நேற்று முன்தினம் கலைக்கப்பட்டது.

மேற்கு வங்காள ஆளுநர் பேராசிரியர் முனோர் ஹசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை கேரள சட்டப்பேரவையைக் கலைக்குமாறு ஆளுநரிடம் பரிந்துரைப்பதென்று கேரள அமைச்சரவை நேற்று முடிவுசெய்துள்ளது. (க)

## ★ யாழ். மாவட்டத்திற்கு

# பெருமளவுநெல்கொள்வனவு அரிசிவிலையில் மேலும்வீழ்ச்சி

(பூநகரி)

யாழ். மாவட்டத்தில் நிலவும் அரிசி தட்டுப்பாடு பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ளபலநோ.கூ.சங்க லொறிகள் மூலம் தனியார் லொறிகள் இரவு பகலாக மன்னார், கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, பூநகரி ஆகிய பகுதிகளிலிருந்து பெருமளவு நெல் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனால் யாழ். மாவட்டத்தில் ஓரளவு அரிசி தட்டுப்பாடு பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண பகுதியில் அரிசியின் விலை மேலும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

## விஞ்ஞான பட்டதாரி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சிறப்பு விஞ்ஞான பட்டதாரிபரீட்சை 1989 முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சையில் பௌதீகவியலில் இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவில்) கே. கணேசன் சித்தியடைந்துள்ளார்.

பௌதீகவியலில் இரண்டாம் வகுப்பு (கீழ்பிரிவில்) ஜே. ஏ. டி. ஜெகதீசன் சித்தியடைந்துள்ளார்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் வருமாறு: ஏ. யோசவ், ரி. ரவிச்சந்தர்.

பௌதீகவியலுக்கான சேர். அருணாசலம் மகாதேவா ஞாபகார்த்த பரிசினை கே. கணேசன் பெற்றுள்ளார். (153)

## பங்களாதேஷில் வயிற்றோட்டம்

# 32 பேர் பலி!

(டாக்கா)

பங்களாதேஷில் வயற்றோட்ட நோய்க்கு இதுவரையில் 32 பேர் பலியானதுடன் 2000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இம்மாவட்டத்திலுள்ள சிறைச்சாலை ஒன்றில் ஏற்பட்ட மோதலில் 8 பேர் கொல்லப்பட்டனர். 250 பேர் காயமடைந்துள்ளனர். (க)

## நிவாரணம் தொடர்பாக

# அரசாங்க அதிபரை சந்திக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

வன்செயல்களினால் சுயதொழில் பாதிக்கப்பட்ட புலோலி கிழக்கு, தும்பளை துன்னாலை வடக்கு கிராம சேவை ஆலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு சுயதொழில் பாதிப்பு நிவாரணம் ரூபா 4000/- வழங்கப்படாதது குறித்து இப்பகுதி மக்கள் பலத்த கவலையுமடைந்துள்ளனர்.

வன்செயல்களினால் சுயதொழில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பருத்தித்துறை இலங்கை வங்கியில் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தபோதும் குறிப்பிட்ட கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு மாத்திரம் இந்நிவாரணம் ரூபா 4000/- வழங்கப்படாதிருப்பதேன் என இக்கிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தமக்கள்கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் இது சம்பந்தமாக இக்கிராம சேவை அலுவலர் பிரிவுகளைக்சேர்ந்த மக்களின் தூதுகோஷ்டியொன்று யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டைச் சந்தித்துப் புகார் செய்யவுள்ளதாகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## இராசி பலன்

02-04 1991

செவ்வாய்க்கிழமை

திருதியை பி. ப. 2 51வரை விசாகம் முழுவதும். மரண யோகம் கரிநாள், இராகுகாலம் மாலை 3-11 முதல் 3-41 வரை; சுபநேரம் காலை 10-41 முதல் !2-11 வரை.

மேஷம் காரியபலிதம் தொழில்பிணக்கு, அநாவசிய தொலை கவலை.

இடபம்: குடும்ப உல்லாசம், தந்தையர் உதவி ஞானிகள் தரிசனம்.

மிதுனம்: பணவரவுதொழில் லாபம், பயணங்களால் அனுகூலம்,

கடகம்; தெய்வீக செலவு புதிய முயற்சி தொழில் தகராறு.

சிங்கம்; இனிய சந்திப்பு, மனநிறைவு, இனசன வருகை வெற்றி.

கன்னி; தொழில்பாராட்டு தூரத்து செய்தி, குடும்பமகிழ்ச்சி.

துலாம்: வாக்குகலகம் அதிகாரிகள் தொல்லை, அவமதிப்பு

விருச்சிகம்: அந்நியர்உதவி காரியபலிதம் தொழில்லாபம்.

தனுசு; பழைய நினைவுகள், பெரியோர் தகராறு குடும்ப கவலை.

மகரம்: எண்ணியது தாமதமாகும். பெண்பகை, குடும்ப மனஸ்தாபம்.

கும்பம்: வீட்டில் மகிழ்ச்சி வஸ்திரலாபம் அதிகாரம் பொதுப்பணி.

மீனம்: ஆவேச போக்கு. மாமியார் தொல்லை குடும்ப சந்தோசம்.

— ஜோஸ்யர்

# அடிமை விலங்கை ஒடிக்க களத்தில் போராடிய வீரன்

## மேஜர் செங்கதிருக்கு அஞ்சலி

(புங்குடுதீவு)

தமிழ் இனத்தின் அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து அம்மக்களின் சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுக்க தன்னால் ஆன பங்களிப்பைச் செலுத்தி எம் இனத்திற்காக தன் உயிரை ஈந்தவர் திரு: செங்கதிர்.

இவ்வாறு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் யாழ். மாவட்ட பிரசாரப் பிரிவுப் பொறுப்பாளர் செங்கதிர், சிந்து ஆகியோரின் 30ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. தினேஷ் குறிப்பிட்டார்.

அவர் மேலும்கூறியதாவது: இவர் 1984ம் ஆண்டு போராட்டத்தில் குதித்து தனது இனத்தின் விடிவுக்கு முழுப்பங்கேற்று வந்தார். 1987ல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்மூலமாக இந்திய இராணுவம் இங்கு அமைதிப் படையென்ற பெயரில் குவிக்கப்பட்டபோது அவர்களை இங்கிருந்து விரட்டியடிக்க முனைப்பாக நின்று மக்களோடு மக்களாக இணைந்து பல போராட்டங்களை முன்நின்று நடாத்தினர். எந்த நேரமும் விடுதலை என்ற உணர்வுடன் வாழ்ந்தவர். விடுதலையே கண்ணாக இருந்து தன் உயிரை அர்ப்பணிததவர்.

போராட்டத்தில் எவ்வளவு நாட்டங்கொண்டாரோ அதே போன்று சகல துறைகளிலும் நாடக எழுத்தாளராக, கவிஞராக, நடிகனாக மக்களினால் பெரும் பாராட்டைப்பெற்றவர். இவரது இழப்பு தமிழினத்துக்கு பெரும் துயரத்தை கொடுத்துள்ளது.

சு. நித்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் செங்கதிர், சிந்து ஆகியோரின் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்யப்பட்டு தீபமும் ஏற்றப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. சுதா தனது உரையில் செங்கதிர் அவர்களின் வாழ்க்கைப் பயணம் போராட்டத்திற்காகவே அமைந்துள்ளது என்றார். (101)

# உல்பா தீவிரவாதிகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

''இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் உல்பா தீவிரவாதிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடாத்தக் கூடிய சந்தர்ப்பம் விரைவில் ஏற்படும்''

இந்திய மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. சுபோத் கான் சஹாய் நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடையில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; உல்பா தீவிரவாதிகள் தேசிய நீரோட்டத்தில் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் இது தொடர்பான பூர்வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## மண்ணெண்ணை ஒரு லீற்றர் 30 ரூபா!

(பூநகரி)

பூநகரி பல நோ. கூ. சங்கத்தில் மண்ணெண்ணை ஒருலீற்றர் 30 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு குடும்பத்தில் பாவனையாளருக்கு 2 லீற்றரும், விவசாயிகளுக்கு 5லீற்றரும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் கொழும்பில் இருந்து நேரடியாக மண்ணெண்ணை பெற்றுக் கொடுப்பதற்கு ப. நோ. கூ. ச பொதுமுகாமையாளர் முயற்சி எடுத்து வருகின்றார். (23)

# வார்சோஒப்பந்தக் காலாவதி

(மொஸ்கோ)

36 வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட 'வார்சோ' ஒப்பந்தம் மார்ச் 31ம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது.

'நேட்டோ' நாடுகளுக்கெதிராக சோவியத் குடியரசினால் 1955ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் நாடுகளை உள்ளடக்கி இவ்வொப்பந்தம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வொப்பந்தம் காலாவதியாவதை குறிக்குமுகமாக கடைசியாக மொஸ்கோவில் தங்கியிருந்த மற்றய நாட்டு இராணுவ அதிகாரிகளும் தத்தம் நாடுகடகுதிரும்பினர். (பூ)

# பலதும் பத்தும்

## ரவிவர்மாவின் கற்பனையே...

ஓவியக்கலைவடிவம் ஆதி மனிதனோடு வளர்த்து வந்த கலைவடிவமாகும், அச்சுக் கலையின், வளர்ச்சியோடு இன்று மிகவும் ஆதிக்கம் பெற்று கலைவடிவமாகவும் அது வளர்ந்து வந்துள்ளது.

ரவிவர்மா (1848-1906) கேரளத்தில் பிறந்து திருவாங்கூர் மகாராஜாவின் அரண்மனை ஓவியராக வாழ்ந்தவர். இந்தியாவின் பல பகுதிகளும் சென்று பணத்திற்காகஓவியம்வரைந்தார். இந்துமத தெய்வங்களுக்கு கற்பனை வடிவங்கொடுத்தவர் புராண, இதிகாச காவிய மாந்தருக்கும் பொய்மை வடிவம் தந்தவர்.

நமது வீடுகளில் காணப் படும்சிவபிரான் உமாதேவி, பிள்ளையார், லட்சுமி, சரஸ்வதி, நாரதர், கண்ணன் திருமால் படங்கள் யாவும் ரவிமர்மாவின் கற்பனைப் படைப்புக்களாகும்.

ரவிவர்மா தீட்டிய ஓவியங்கள் மக்கள் நினைவுகளில் பதிந்துவிட்டன, பூஜை அறைகளிலேயே அவை மாட்டப்பெற்று வழிபடப் படுகின்றன. — ஞாநி

# கீரிமலையில் பல வீடுகள் படையினரால் தகர்ப்பு

(பண்டத்தரிப்பு நிருபர்)

கீரிமலை கூவில் பகுதியைச் சேர்ந்த பல வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுத் தமது வீடுகளைப் பார்க்கச் சென்றவர்கள், தூரத்தில் நின்று பார்த்த போது வீடுகள் தகர்க்கப்பட்டிருப்பதையும், ஓலையால் வேயப்பட்ட சிறு வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டிருப்பதையும் கண்டனராம்.

இதேவேளை, சீவல் தொழிலாளியான 'வீமன்' என்று அழைக்கப்படும் நாகர் என்பவரைக் காணவில்லை என்றும் இவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி இருக்கலாமென்றும் கூறப்படுகின்றது.

மேலும் கூவில் பகுதியில் இருந்து அச்சம் காரணமாக அகதிகளாக வெளியேறித் தூர இடங்களுக்குச் சென்று தங்கியிருக்கும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரைத் தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (72)

# மன்னாரில் வீரமரணமடைந்த வீரவேங்கைகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் வேப்பங்குளம் மோதலில் வீரமரணமடைந்த 12 விடுதலைப்புலிப் போராளிகளின் பெயர் விபரம்:

லெப். ஜான் (செ பமாலை ஸ்ரான்லி பெர்னாந்து- முல்லைத்தீவு), லெப். அருண் (க. நித்தியாஸ்வரன்- கிளிநொச்சி), லெப். யேசு செபஸ்ரியன் ஜோசப் அன்ரனி- கிளிநொச்சி), புனிதன் ரி. விஜயன்- வவுனியா), குஞ்சன் (க. கமலேஸ்-முல்லைத்தீவு), நிதி (வே.பரமேஸ்வரன் முல்லைத்தீவு], பைமன் (மிக்கேல் திவ்வியநாதன்-மன்னார்), பொஸ்கோ (ச. பத்மதான்- முருங்கன்], ரவி (சு. ஜெயநேசன்-முல்லைத்தீவு), துஷான் (இசித்தோர் மோகனதாஸ்- முல்லைத்தீவு), கண்ணன் (ம. ராஜேஸ்வரன் - முல்லைத்தீவு], பைரவி (நா. சதீஸ்குமார்- நெடுந்தீவு). (வி)

## சடலங்களையும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் நீண்ட வரிசையில் சென்று கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும், இராணுவத்தினரின் சடலங்களையும் பார்வையிட்டனர்.

பார்வைககு வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களில் 'மினிமினி எல். எம். ஜி.' துப்பாக்கிகளே பொதுமக்களை மிகவும் கவரக்கூடியதாக இருந்தது.

இராணுவத்தினரின் சடலங்கள் அனைத்தும் அடையாளம் காணமுடியாத அளவிற்கு பாரிய காயங்களுடனும் உடல்கள் பொருமி பருத்த நிலையிலும் காணப்பட்டன. 23 இராணுவத்தினரின் உடல்களும், இராணுவத்தினரின் சீருடைகளுடனேயே கிடக்கக் காணப்பட்டன.

இத்தாக்குதலின்போது 24 சடலங்கள் கைப்பற்றப்பட்ட போதும் ஒரு இராணுவ சடலம் மிகவும் மோசமான நிலையில் உருக்குலைந்து போனதால் அச்சடலம் பார்வைக்கு வைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உட்பட ஆயிரத்திற்கு மதிகமானோர் இச்சடலங்களையும் ஆயுதங்களையும் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பிரட் அவர்களும் இச்சடலங்களை பார்வையிட்டார்.

நேற்று பி.ப. 3-30 மணியளவில் இச்சடலங்களும் விடுதலைப்புலிகளினால் ட்ரக் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டன (வி-56)

# போதைவஸ்து பாவித்த உதைபந்தாட்ட வீரர்

[ரோம்]

உலகின் தலைசிறந்த முதல்தர, உதைபந்தாட்ட ஆட்டக்காரரான ஆர்ஜன்டீன வீரர் டிக்மரடோனா, போதை மருந்தை பாவித்த குற்றத்துக்காக தண்டிக்கப்படவுள்ளார்.

கடந்தவாரம் இத்தாலியில் நடைபெற்ற ஒரு உதைபந்தாட்டப் போட்டியில் மரடோனா மிகவும் உற்சாகமாக விளையாடியதால் இவர் மேல் சந்தேகம் கொண்ட போட்டி அமைப்பாளர்குழு போட்டி முடிவடைந்ததும் உடனடியாக மரடோனாவை வைத்தியப் பரிசோதனைக்குட்படுத்திய போது இவர் போதை மருந்து உட்கொண்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி குற்றத்துக்காக, வீரர் மரடோனாவை இரண்டு வருடங்களுக்கு சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாதபடி தடைவிதிக்கப்படலாம் என தெரிய வருகிறது. (வி)

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

[பருத்தித்துறை]

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் கடந்த ஒரு மாதத்திற்குள் பத்துச் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (52)

## இளவாலை

(1-ம் பக்கற் தொடர்ச்சி)

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்படி முடிவை அரசஅதிபர்தெரிவித்தார். (153)

## காரைநகரில்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பட்டதை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் காரைநகரிலிருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி இரவோடு இரவாகச் சென்றவண்ணம் இருந்தனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. (சி)

## கொழும்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், வவுனியா அகதிகள் முகாம்களிலும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பயணிகள், புளியங்குளம் பகுதிகளிலும் தரித்து நிற்கின்றனர். இப்பயணிகளில் பலர் நேற்று யாழ் நகருக்குத் திரும்பி வந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (வி)

## இராணுவ இழப்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் மேற்படி தகவலை வெளியிட்டனர்.

## 500 பேர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து வாகனங்கள் எதுவும் வவுனியாவிற்குப்புறப்படவில்லை.

கொழும்பு செல்வதற்கென முத்திரைச்சந்தையிலுள்ளபஸ் நிலையத்திற்கு வந்த பலர் வவுனியாவிற்கு வாகனமெதுவும் புறப்படாமையினால் திரும்பிச் சென்றனர். (56)

# பாடசாலை, கொத்தணி— அதிபர்களுக்கான அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொத்தணிஅதிபர்களுக்கும் பாடசாலைஅதிபர்களுக்குமான அவசரகூட்டம் இன்றும், நாளையும் கீழ் குறிப்பிட்ட இடங்களில் கல்விக்கோட்டரீதியாக நடைபெறவுள்ளது.

வடமராட்சியில்இன்றுகாலை 9-00 மணிக்கு வட. இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும். பண்டத்தரிப்பில் மு.ப. 11-30 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திலும். மருதனமடக்கல்விக்கோட்டத்தில் பி. ப. 1-30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை தென்மராட்சி கல்விக்கோட்டம் மு. ப. 9-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்திலும், யாழ்: கல்விக் கோட்டம் மு.ப.11-00மணிக்கு சி. சி. சாதனா பாடசாலை மண்டபத்திலும், வேலணைக்கல்விக் கோட்டம் பி.ப. 1-30மணிக்கு வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

## மனிதாபிமான

1-ம் பக்கத்தொடர்ச்சி)

படைக்க முன்வந்ததைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வரவேற்றுள்ளது.

மேற்படி சடலங்களை இன்று காலை 8 மணிக்கு விடுதலைப் புலிகளிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்ற பின்பு 10 மணிக்கு பருத்தித்துறையில் வைத்து அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படலாமெனத் தெரியவருகின்றது. (வி)

## ஒய்வூதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தால் உடனடியாக யாழ். செயலக ஒய்வூதியக் கிளையுடன்தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

முறைப்பாடு செய்யும் போது, ஒய்வூதிய இலக்கம், ஒய்வூதியக்காரரின் வதிவிட விலாசம், ஒய்வூதியம் பெறும் வங்கி ஆகியவற்றின் விபரங்களைக் குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளுமாறு யாழ் செயலகப் பிரதம கணக்காளர் கேட்டுக்கொண்டுள்ளார். 153)

## வடக்கிலும்

(1-ம் பக்கத்தொடர்சசி)

குருநாகலில் நடைபெற்ற மாகபொல நிகழ்ச்சியில் கலந்துகொண்டுபேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது

வடக்கிலும் கிழக்கிலும் சமாதானம் ஏற்படுமாயின் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதப்படுத்த முடியும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கும் மாகபொல புலமைப் பரிசில் வழங்கப்படும். (ரி)

# புலிகளின் தாக்குதலினால் இராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினர், விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்துப் பின்வாங்கி முகாம் திரும்பினார்கள்

நேற்று முன்தினம் முற்பகல் 11-30 மணியளவில் ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து சின்னமூளாய்-பொன்னாச்சி கடைப் பக்கமாக 300 யார் தூரம் முன்னேறி வந்த படையினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினார்கள்.

இத்தாக்குதலின்போது இராணுவத்திற்கு உதவியாகக் கடற் பகுதியிலிருந்து பீரங்கித் தாக்குதலும், ஹெலிகொப்டரிலிருந்து கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2-00 மணி வரை நடைபெற்ற இம்மோதலில் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பிச் சென்றனர். (வி)

## டிரக் வண்டி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட நால்வர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெற்றிவேலு கேதீஸ்வரம் (65 வயது), கே. பாக்கியம் (50 வயது), சண்முகநாதன் சகுந்தலா (வயது 8), எஸ்.சுந்தரலிங்கம் (50வயது) மானிப்பாய் ஆகியோரே இவ்விபத்தில் காயமடைந்தனர். (56)

## வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து தீவிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி தெரிவிக்கப்படாத போதிலும் இராணுவதரப்பில் பலத்த சேதமேற்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது.

இதேவேளை மன்னார் பகுதியில் கடந்த இருவாரங்களாக இரு பகுதியினருக்குமிடையே சண்டை நடைபெற்று வருவதாக வி. பி. ஸி. தெரிவித்தது. (ரி]

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரால் தீக்கிரையாக்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட பொது மக்களில் 12 பேர் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் வெட்டுக் காயங்களுடனும், சூட்டுக் காயங்களுடனும் வீதிகளில் வீசப்பட்டிருந்ததாக பி. பி. ஸி. கொழும்பு செய்தி முகவர் தெரிவித்தார். (ரி)

# OBITUARY

## K. DHARMANANDAN

Dharmanandan, K - The death is announced of Kathiravaloo Dharmanandan, son of the late Mr & Mrs. N Kathiravaloo and Son-in-law of the late Mr. & Mrs. S. S Periathamby. Husband of Selvamalar. Father of Narendra, Mahendra and Ravindra. Father-in-law of Susie, Erika and shranie Grand-father of Lilanthi and David Brother of the late Balaratnarajah, the late Retnanandan, the late Kamalanathan, Mrs. Kadirgamar, Mrs. Gunaratnam Mrs. Breckenridge, Mrs. Pcrinpanayagam, Mrs Sinnatamby. Brother-in-law of Mrs. Sellam Balaratnarajah and Mr C.S.Gunaratnam Funeral service will be held at 3 p. m on the 3rd April 1991 at his residence-22, Rakka Lane, Chundikuli. Remains will be removed for interment thereafter to Thundy cemetery (Methodist Section) Colombogam

(C 4603)

அறவழி நூலக சபை நடத்தும்
க. பொ. த. (உயர்தர) வகுப்பு 1990
கலை/வர்த்தக மீட்டல் கருத்தரங்கு

இடம்: காந்தி நினைவரங்கு அறவழி பணிமனை.
காலம்: 15-4-91 முதல் 19-4-91 வரை.
அனுமதிக் கட்டணம்: ரூபா 10/-மட்டும்.

பிரபல்யம்மிக்க ஆசிரியர்களால் மீட்டல் பயிற்சி விரிவுரைகள் நிகழ்த்தப்படும்.

அறவழி போராட்டக் குழு

தொடர்பு:
அறவழி நூலக சபை,
ஸ்ரீபதி,
கைதடி-நுணுவில், சாவகச்சேரி. (சி 1202)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number. B/100306/81.